தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1993 பிப்ரவரி 10 புதன்கிழமை

தை 28, ஆங்கீரச, திருவள்ளுவர் ஆண்டு—2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று''

பின்னர் எண்ணி எண்ணி கவலைப்படுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யாதிருக்க வேண்டும். தப்பித் தவறி செய்து விட்டாலும் மீண்டும் அத்தகைய செயல்களைச் செய்யாதிருப்பது நல்லது.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் வி. பூவராகன் மற்றும் டபிள்யூ. ஜெ. பெர்னாண்டஸ் ஆகியோர் 22—12—1992 ஆம் நாளன்று மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பூவராகன் அவர்கள் 1937 ஆம் ஆண்டு முதல் 1939 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர்—கும்பகோணம் நகரியங்கள் பொது நகர்ப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

திரு. டபிள்யூ. ஜெ. பெர்னாண்டஸ் அவர்கள் 1946 ஆம் ஆண்டு முதல் 1951 ஆம் ஆண்டு வரை ஆங்கிலோ—இந்தியத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் மேலும் 1952 முதல் 1957 ஆம் ஆண்டு வரை அன்றை. ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையில் முதல் நியமன உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து இரண்டு மணித்துளிகள் மௌனமாக நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள், வினா எண். 41, திரு. ஆ. சுப்புரத்தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

41—

சட்டமன்ற உறுப்பினர்களின் கடிதங்களுக்கு உடன் பதில் அளித்தல்.

*10484—திரு. ஆ. சுப்பரத்தினம்:

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதும் கடிதங்களுக்கு தவறாமல் பதில் எழுத வேண்டும் என்பன போன்ற அறிவுரைகள் அரசு உயர் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : முதலமைச்சர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே இருக்க வேண்டிய அலுவல் சம்பந்தமான கடிதப் போக்குவரத்து பற்றி பதினைந்து